O.S.No. 55/2021

வா.சா.01, திரு. ராமமூர்த்தி
நாள் : 04.02.2025 நேரம் : 11. 46 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)நான் பிராதில் பெருமாள் கோவில் வசித்து வருகிறேன் என்று கூறியிருக்கிறேன் என்றாலும், காரைக்குடியில் தான் வசித்து வருகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்துகள் அனைத்தையும் 30 வருடங்களாக 1ம் பிரதிவாதியும் மற்றும் அவரது தாயார் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சட்ட காலத்திற்கு மேலாக 1ம் பிரதிவாதி அவரது தாயாருடன் சேர்ந்து இந்த தாவா சொத்துக்களை நீண்ட அனுபவம் செய்து வருவதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா சொத்துகள் ஒரு போதும் எனது அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 30 வருடங்கள் கழித்து நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

2)தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள நிலையில் நான் எனது அனுபவத்தில் இருப்பதாக பொய் சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.53 A.M

சாட்சியின் கையொப்பம்.